**சிசி 146/2018 அசா.1 ராணி க.பெ புண்ணியமூர்த்தி தேதி 03.03.2023**

(1 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளார். 2 முதல் 5 வரையிலான எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 2 முதல் 5 வரையிலான எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**1.** நான் முதுகலை பொருளாதாரம் படித்து உள்ளேன். நான் 1 வது எதிரியுடன் அவரது கிராமத்தில் சுமார் 6 மாதங்கள் குடும்பம் நடத்தினேன். அங்கு நான், 1 வது எதிரி மற்றும் எனது மாமியார் மூவரும் வசித்து வந்தோம். 1 வது எதிரி திருமணமான ஒரு மாதத்திற்குள் வேலை விஷயமாக சென்னை சென்றுவிட்டார் என்றால் சரிதான், சென்றார் பின்னர் சிலநாட்களில் திரும்பி வந்துவிட்டார். ஆறுமாதம் கழித்து நானும், 1 வது எதிரியும் சென்னைக்கு சென்று தனி வீட்டில் வசித்து வந்தோம். சென்னையில் இருந்தபோது, 1 வது எதிரி என் அண்ணன் இளையராஜாவிற்கு 30,000 ரூபாய் பணம் அனுப்பினார் என்றால் சரியல்ல. சென்னையில் இருந்தபோது, 1 வது எதிரி என் அண்ணன் இளையராஜாவிற்கு 30,000 ரூபாய் பணம் அனுப்பினார் என்றாலும், வழக்கிற்காக நான் இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், 1 வது எதிரியும் 2012 ம் ஆண்டு வரை சென்னையில் வசித்தோம். 2012 மே மாதத்திற்கு பின்னர் சென்னையில் இருந்து திரும்பிவிட்டோம்.

2. 2010 ம் ஆண்டு நானும், 1 வது எதிரியும் சென்னையில் வசித்தபோது, அங்கு வந்த எனது தகப்பனார் 1 வது எதிரி வீட்டில் இல்லாத சமயத்தில் என்னை அழைத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. மாதவமணி, முத்துகுமார், மணி ஆகியோர் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நானும், 1 வது எதிரியும் மன வருத்தத்தில் பிரிந்து இருந்த சமயம், மாதவமணி, முத்துகுமார், மணி ஆகியோர் எனது தகப்பனார் வீட்டிற்கு வந்து சமாதானம் பேசினார்கள் என்றால் சரியல்ல, 1 வது எதிரியும், நானும் சென்னையில் இருந்தபோது, மாதவமணி, முத்துகுமார், மணி ஆகியோர் எனது தகப்பனாரிடம் சென்று, 1 வது எதிரி வேலை இல்லாமல் இருந்து வருகிறார், அவருக்கு பண உதவி செய்யுமாறு கேட்டுள்ளார்கள். மேற்படி விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். மாதவமணி, முத்துகுமார், மணி ஆகியோர் சமாதானம் பேச தான் வந்தனர் என்றாலும், பணம் கேட்டு வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் 2012 ம் ஆண்டு வரை என் கணவருடன் தான் இருந்தேன். எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. 2012 ம் ஆண்டு சென்னை குடும்பநல நீதிமன்றத்தில் 1 வது எதிரி எனக்கு எதிராக விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் நானும், 1 வது எதிரியும்

சென்னையில் ஒரே வீட்டில் வசித்த போது தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொன்னார்.

3. எனக்கு குழந்தை இல்லை என்பதால் என்னை தீண்ட தகாதவர் போல் 1வது எதிரி கொடுமை செய்தார் என்று நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் 2017 ஜனவரி மாதம் புகார் அளித்தேன், தேதி ஞாபகத்தில் இல்லை. புகாரினை நான் எழுதி கொடுத்தேனா என்றால் சரிதான், நான் தான் எழுதி கொடுத்தேன். நான் கொடுத்த புகாரிற்கு நடவடிக்கை எடுக்கவில்லை போலீசார் ஒரு புகார் எழுதி கொண்டு, என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். நான் புகார் கொடுத்த அன்று என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை, அதன் பின்னர் விசாரணை செய்தனர்.

4. அ.சா.ஆ.2 திருமண அழைப்பிதழ் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் துளசேந்திரபுரம்குடிகாடு கிராமத்தை சேர்த்நவர் கொடுத்தார்கள். மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி அழைப்பிதழை சொடுத்தேனா என்றால் திருமண அழைப்பிதழை மட்டும் கொடுத்தேன், கொடுத்தவர் பெயர் சொல்லவில்லை. நான் சொல்வது போல் திருமண அழைப்பிதழை யாரும் எனக்கு கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக நானாக திருமண அழைப்பிதழை பொய்யாக தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. பொதுவாக அச்சகத்திற்கு சென்று, திருமண அழைப்பிதழ் அச்சிட வேண்டும் என யார் கேட்டு கொண்டாலும் அச்சடிப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் 1வது எதிரிக்கு இரண்டாவது திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் 1வது எதிரியிடம், அவரது தாயாரை விட்டு பிரிந்து தனிக்குடுத்தனம் வருமாறு அழைத்தேன் எனவும், அதற்கு 1வது எதிரி மறுத்ததால், எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

5. நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் எனக்கு எந்தவிதமான கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என் தகப்பனாரின் தவறான ஆலோசனைகளை கேட்டு, 1வது எதிரியுடன் வாழ மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், 1வது எதிரிக்கும் இடையே பலமுறை சமாதானம் பேசியும், நான் உடன்படாததால் எதிரி எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றாலும், அதனாலேயே நான் எதிரியை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரி மீது பொய்யான புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**